ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

अहमिति मतिमतिहेये वारय काये निरन्तरापाये ।
परशिवपदाभिधेये ब्रह्मणि सदये निधेहि तां हृदये ॥

அஹமிதி மதிமதிஹேயே வாரய காயே நிரந்தராபாயே ।
பரஶிவபதாபிதேயே ப்ரஹ்மணி ஸதயே நிதேஹி தாம் ஹ்ருதயே ॥

अये—ஓ!
हृत्—மனமே!
अतिहेये—மிக்கத் தள்ளவேண்டியதும்
निरन्तर—எப்பொழுதும்
अपाये—அபாயத்தையுடையதுமான
काये—சரீரத்தில்
अहम् इति—நான் என்றும்
मतिं—நினைவை
वारय—விலக்கிவிடு.
तां—அந்த நினைவை
परशिव—பரசிவம் (என்னும்)
पदाभिधेये—பதத்தால் சொல்லக்கூடிய
सदये—தயையோடு கூடின
ब्रह्मणि—ப்ரம்மத்தினிடம்
निधेहि—திடமாய் வைத்துக் கொள்.

ஸர்வபிராணிகளும் தங்கள் தங்களது உண்மையான ஸ்வரூபத்தை நன்கறிந்து பேரானந்த வடிவமாய் விளங்கவேண்டுமென்றும் கருணை நிறைந்த கருத்தோடு பரமேசுவரன் அந்த நல்லறிவைப் பெறுவதற்குச் சாதனமாக சரீரேந்திரியாதிகளை வேறாய் விருஷ்டித்துக் கொடுத்திருக்கின்றார். இந்த சரீரேந்திரியாதிஸாதனங்களால் நற்கர்மமியற்றி, சித்த சுத்தியடைந்து பரம வைராக்கியம் பெற்று ஸத்குரு நாதனையடுத்து சிரவணாதி சாதனங்களை நிறைவேற்றி, அதனால் நல்லறிவுண்டாகி, அப்பரசிவத்தையே தானெனநினைந்து பவக்கடலைக் கடப்பார்களென்பது அவரது உட்கருத்தாம். அதை அறியாமல் தோஷமிகுதியால் எவ்விதத்திலும் தள்ளக்கூடியதாய் என்னேரத்திலும் அபாயம் அடையும் நிலைமை வாய்ந்த இவ்வூனஉடலையே தானெனக்கருதி அதுபடும் துயரமெல்லாம் தான் படுவதாக நினைக்கும்படி செய்து விட்டாயே மனமே! இனியாவது அந்த நினைவை அடியோடு மாற்றி விட்டு பரம கருணாமூர்த்தியான ஸச்சிதாநந்த வடிவபா சிவமே நான் என்று திடநம்பிக்கை வைத்து சிரேயஸ்ஸை அடையும்படி செய்வாயாக.

சுபம்!

பத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

க்ஷய வரு தை-மீ ௨௮௳

## ஸம்ஸ்காரம்.

### 1-வது கர்ப்பாதானம்.

இதைப் பற்றி ஆர்யதர்மம் 10-வது வருஷத்தின் சில சஞ்சிகைகளில் எழுதியிருந்தோம். இது விஷயமாய் இன்னும் சிறிது சொல்லவேண்டியதைக் கூறி வரிசையாய் மற்ற ஸம்ஸ்காரங்களையும் முறையே விவரிப்பாம். இதற்கு அதிகாரிகளான ஸ்திரீ புருஷர்களின் வயதைப் பற்றி நமது பிராசீன வைத்தியகக்கிரந்தங்களில் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது வாக்படாசாரியார் அவர்களியற்றிய அஷ்டாங்க ஸங்கிரஹத்தின் சாரீரஸ்தானத்தில் புத்திரகாமீயாத்தியாயத்தில்

तस्यां षोडशवर्षायां पञ्चविंशतिवर्षः पुरुषः पुत्रार्थं प्रयतेत ।
तदा हि तौ प्राप्तवीर्यौ वीर्यान्वितमपत्यं जनयतः ।

𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌷𑍋𑌡𑌶𑌵𑌰𑍍𑌷𑌾𑌯𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌵𑌰𑍍𑌷𑌃
𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍇𑌤 । 𑌤𑌦𑌾 𑌹𑌿 𑌤𑍌
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌵𑍀𑌰𑍍𑌯𑍌 𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑌪𑌤𑍍𑌯𑌂 𑌜𑌨𑌯𑌤𑌃 ।

"இருபத்தைந்துவயதுள்ள புருஷன் சாஸ்திரவிதிப்படி முந்தியே விவாஹம் செய்யப்பட்டு பதினாறு வயது பூர்ணமாய் நிறைந்த தன் பத்னியிடம் புத்திரஸந்தானத்திற்காக பிரயத்தினப்படவேண்டும். அப்பொழுதுதான் அந்தஸ்திரீபுருஷர்களுக்கு வீர்யம் பூர்ணமாய் ப்ராப்தமாகி வீர்யவானுகியஸந்தானத்தையுண்டு பண்ணஸாமர்த்தியமுண்டாகும்." என்பதாதியாக காலவரை குறிக்கப்படுகின்றது. அந்தவயதுக்குக்குறைந்தால் அந்த கர்ப்பம் மாதாவின் குக்ஷியிலேயே மரித்துவிடும். அல்லது அற்பாயுஸ், அற்பவீர்யம், உள்ளதாகவும் பலவிதபிணியுள்ளதாகவும் ஜனிக்கும். அதனுல் இங்கு குறிப்பிட்டபடி வயதானவர்கள் அதற்காகவென்று

சோதிட சாஸ்திரத்தின் முகூர்த்தக்கிரந்தங்களிலும், ஸம்ஸ்காரங்களை விதிக்கும் ஸ்மிருதிகளிலும் விதிக்கப்பட்ட சுபநக்ஷத்திராதிகள் கூடின சுபலக்கினத்தில் மந்திரபூர்வகமாக கர்ப்பாதானத்திற்கு யோக்யதை யுடையவராவார்கள். புத்திரப்ராப்தி பிரதிபந்தத்தால் தடைபடுமாகில் அதற்காக சோதிடசாஸ்திரங்களில் கூறப்படும் பரிஹாரத்தைச்செய்து கொள்ளவேண்டும். புத்திரப்பிராப்திக்கு ஸாதனங்களாகக் கூறப்படும் சுபகர்மங்களையும் செய்யவேண்டும். வைத்திய சாஸ்திரங்களில் வாஜீகரணத்தியாயத்தில்கூறப்படுகின்ற வாஜீகர ஔஷதங்களை ஸேவிக்க வேண்டும். எப்படியாவது திருஷ்டமாயோ, அதிருஷ்டமாயோ உள்ளசாதனங்களையனுஷ்டித்து புத்திரப்பிரதிபந்தகதோஷத்தையகற்றி புத்திரபாக்கியத்தைப் பெற முயற்சிக்கவேண்டும். இவ்வாறு செய்யப்படும் கர்ப்பாதான ஸம்ஸ்காரத்தால் கர்ப்பத்திலிருக்கும் சிசுவுக்கு 40 ஸம்ஸ்காரங்களுள் முதலாவது ஸம்ஸ்காரம் செய்யப்பட்டதாகின்றது. இனி இரண்டாவது பும்ஸவனம் கூறப்படும்.

## 2-வது பும்ஸவனம்.

பும்ஸவனமென்பது2-வதுஸம்ஸ்காரத்தின்பெயர். அதாவது எந்த கர்மாவினால் கர்ப்பிணியான ஸ்திரீ புருஷப் பிரஜையையே பெறுவாளோ அந்தக்கார்யமாம் அதாவது ஆலமரத்தின் மொக்கு முதலிய வைத்தியசாஸ்திரத்தில் கூறப்படுகின்ற ஔஷதிகளைப் பால் முதலியவைகளைச் சேர்த்து இடித்து அதன் சாரத்தைக்கர்ப்பிணியின் மூக்கில் பிழிவதாம். இதனால் சிலகுணங்கள் ஏற்படுவதுடன் ஓர் அதிருஷ்டமுமுண்டாகி புருஷப்பிரஜைக்கு அது ஹேதுவாகின்றதாம். இப்படியே காணப்படாததினால் புருஷப்பிரஜையே யுண்டாகுமென்பது அர்த்தவாதமென்று சிலர் கூற்று. எந்தப்பிரஜையுண்டாவதானாலும் இந்த பும்ஸவனம் நித்தியமாய் செய்ய வேண்டியகார்யமாம். இது முதலாவது கர்ப்பத்தில் மாத்திரம் செய்தால் போதுமானது. ஒவ்வொரு கர்ப்பத்திற்கும் அதிருஷ்டரூபமாக ஸம்ஸ்காரமாய் விடுகின்றது. ஒவ்வொரு கர்ப்பத்திலும் தனித்தனியே இந்த பும்ஸவனம் செய்யப்பட வேணுமென்று சிலாது கொள்கை. இது கர்ப்பம் வியக்தமாக ஆனதும், 2-வது 3-வது மாதத்திலாவது, அல்லது 3-வது 4-வது மாதத்திலாவது கர்ப்பத்திலுள்ள சிசு அசையும்போதுசெய்யவேண்டியது. இதை

தனித்து செய்யச் சௌகரியம் நேராவிடில் ஸீமந்தத்தோடு சேர்த்தும்செய்யலாம் பெரும்பாலும் தற்காலத்திலனுஷ்டானமப்படித்தானிருக்கின்றது. இது ஸீமந்தத்திற்குக் கூறப்படுகின்ற நக்ஷத்திராதிகளில் செய்ய வேண்டியது. விசேஷமாக சந்திரபகவான் புருஷ நக்ஷத்திரங்களோடு சேர்ந்தபோது செய்வது உத்தமம். ஹஸ்தம், மூலம், திருவோணம், புனர்வஸு, மிருகசிர்ஷம் புஷ்யம் இவைகள் புருஷ நக்ஷத்திரங்களாம். முகூர்த்தக்கிரந்தங்களில் புருஷ நக்ஷத்திர விஷயத்தில் அபிப்பிராயபேதமிருக்கின்றது. பும்ஸுவனம் செய்ய வேண்டியப்பிரகாரம் அவரவர்களது ஸூத்திரங்களில் கூறப்படுகின்றது. அதையறிந்து செய்து வைக்கும் உபாத்தியாயர்கள் மூலமாய்த்தெரிந்து கொண்டு அநுஷ்டிக்க வேண்டியது.

## 3-வது ஸீமந்தம்.

இது நான்காவது மாதம் முதல் 5-வது, 6-வது, 7-வது, 8வது 9-வது மாதங்களுக்குள் ஏதாவது ஒரு மாதத்தில் செய்யவேண்டியது. 4, 6, 8, என்ற இரட்டைப்பட்ட மாதத்தில் செய்யவேண்டியதென்று ஸம்பிரதாயம். இந்த மாதங்களில் செய்வதற்கு ஏதாவது பிரதிபந்தம்நேரிட்டால்பிரஸவிப்பதற்குள்ளாவது கட்டாயம் செய்துவிடவேண்டும். அதிலும்தவறி பிரஸவித்துவிட்டால் பிரஸவித்த பிறகாவது அந்த சிசுவை ஒரு பெட்டிக்குள் வைத்துஸீமந்தம் செய்துவிட வேண்டும். பர்த்தா தேசாந்தரம் போய்போனவிடந் தெரியாமலும் திரும்பிவருவான் என்ற நம்பிக்கையில்லாமலிருந்தாலும்மரித்துவிட்டாலும் இந்த ஸீமந்தம் அவசியம்செய்யவேண்டியது. ஆனால் இறந்தவரின்ஸகோதரனாவது குருவாவது ஞாதியாவது செய்யவேண்டியதாம். இது கர்ப்பிணிஸ்திரீயின் ஸம்ஸ்காரமாதலால் முதலாவது கர்ப்பத்தில் செய்தால்போதும். அதுவே ஒவ்வொரு பின்னிட்ட கர்ப்பத்திற்கும் ஸம்ஸ்காரமாய்விடும் என்று சிலர். வேறுசிலர் இது கர்ப்பத்திலுள்ள சிசுவின் ஸம்ஸ்காரமாதலால் ஒவ்வொரு கர்ப்பத்திலும்தனித்தனியே செய்யவேண்டியதென்று கூறுகின்றார்கள். இக்கருத்தையே

**सीमन्तोन्नयनं कर्म तत्स्त्रीसंस्कार उच्यते ।**

**केचिद्गर्भस्य संस्काराद्गर्भे गर्भे प्रयुञ्जते ॥**

ஸீமந்தோந்நயநம் கர்ம தத்ஸ்த்ரீஸம்ஸ்கார இஷ்யதே ।
கேசித்கர்ப்பஸ்ய ஸம்ஸ்காராத் கர்ப்பே கர்ப்பே ப்ரயுஞ்ஜதே ॥

என்று விஷ்ணு கூறியிருக்கிறார். சதுர்த்தி, ஷஷ்டி அஷ்டமி நவமி, துவாதசி, சதுர்தசி, அமாவாஸ்யை, இந்த திதிகள் தவிர மற்ற திதிகளிலும் முற்கூறிய புருஷநக்ஷத்திரங்களிலும் திங்கள் ஞாயிறு வியாழன் வெள்ளி இந்தக் கிழமைகளிலும்சுபகிரஹங்கள் கேந்திரத்திலும் அசுபக்கிரஹங்கள் 3-6-11-வது ஸ்தானங்களிலும் இருக்கும்படியான புருஷ ராசியில் எட்டாமிடம் சுத்தமாயிருக்கும்படியான சுபலக்கினத்தில் ஸீமந்தம் செய்ய வேண்டியது. எந்த மாஸத்தில் செய்யப்படுகின்றதோ அந்த மாஸாதிபதி பலவானுகயிருப்பது நன்று. ஜன்ம நக்ஷத்திரங் கூடாது. இதைச் செய்யும் பிரகாரமும் அவரவர்கள் ஸூத்திரங்களில் கூறப்பட்டபடி கண்டு கொள்ள வேண்டியது. இதன் பிறகு விஷ்ணுபலியென்னும் விஷ்ணுபூஜை செய்ய வேண்டியதாக சில விடங்களில் கூறப்படுகின்றது. ஆனுல் அது ஸம்ஸ்காரத்தில் சேர்ந்ததில்லை. இதே மாதிரி சிசு ஜனித்த பின் "பஹிர் நிஷ்க்ராமணம்" (வெளியில் கொண்டு வருவது) என்னும் ஓர்காரியம் நான்காவது மாஸத்தில் செய்ய வேண்டியதாக மன்வாதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டுள்ளதும் ஸம்ஸ்காரத்தில் சேர்ந்ததில்லையாம். செய்தால் விசேஷபலனுண்டு கர்ப்பிணியாயிருக்கும் பொழுது வளைகாப்பு அடுக்குவது என்னும் பண்டிகை கொண்டாப்படுகின்றதே அதுவும் இம்மாதிரி தான். ஸம்ஸ்காரங்கள் நாற்பதுதான் என்று கணக்கிட்டு விட்டபடியால் அவைகளைத்தவிர கூறப்படுவதெல்லாம் ஸம்ஸ்காரத்தில் சேராது. செய்தால் விசேஷ பலனுடைய காரியமென்று கவனித்துக்கொள்ள வேண்டியது. பத்திராதிபர்.

---

# ஆந்ஹிக க்ரமம்.

## ஸ்நாநம்.

பொதுவாக ஸ்நாநம் இருவகைப்படும். ஒன்று முக்கியம். இதுதேகாரோக்கியமுள்ளவர் செய்யத்தக்கது. மற்றொன்று கௌணம். அது வியாதிகிரஸ்தர், அல்லது முக்யஸ்நாநம் செய்யமுடியாதநிலையிலுள்ளோர் அநுஷ்டிக்கத் தக்கது. முக்கியம் ஆறுவகையும், கௌணம் ஒன்பதுவகையு

மூளது. முக்கியத்தில்நித்யம்நைமித்திகம்காம்யம் கிரியாங்கம் மலகர்ஷணம் கிரியாஸ்நாநம் என்பன ஆறு. கௌணத்தில் ஆக்னேயம் பௌமம்வாயவ்யம் திவ்யம் வாயத்ரகம் மாந்த்ரம் மாநஸம் காபிலம் ஸாரஸ்வதம் என்பனவாம்.

இவைகளில் முக்கியத்தில் முதலாவதான ப்ராதஸ்நாநத்தைப் பற்றி முன்னே கூறுவாம். தந்ததாவனத்தை முடித்துக்கொண்டு இரண்டுமுறை ஆசமனீயம் செய்து ஸங்கல்பம்செய்துகொள்ள வேண்டும். ஸங்கல்பமாவது— ஆதி பிரும்மனின் இரண்டாம் பரார்த்தத்தில் ச்வேதவாரஹ கல்பத்தில் வைவஸ்வத மநுவந்தரத்தில் இருபத்தெட்டாவதான கலியுகத்தில் முதல் பாதத்தில் ஏழுதீவங்களில்ஒன்றான ஜம்புத்வீபத்தில் பாரதவர்ஷத்தில் பாரத கண்டத்தில் மேருவின் தென் பாகத்தில் சகன் வருஷத்தில் தற்போது நடக்கும் ப்ரபவாதி அறுபது ஆண்டுகளுக் கிடையில் இவ்வருஷ. இவ்வயந இந்த ருது இந்த மாத இந்தபக்ஷ இந்த திதி இந்த வார இந்த நக்ஷத்திரத்தில் இன்னன்ன தேவதாஸன்னிதியில் இன்ன தீர்த்தத்தில் நான் தேடிய பாபங்கழியும் மூலமாக ஆண்டவன் ஸந்தோஷத்தின் பொருட்டு ஸ்நாநம் செய்கிறேன் என்று காலதேசங்களைக் குறிப்பதாகும். இங்ஙனம் ஸங்கல்பித்துக்கொண்டு ஆங்குள்ள மிகக்குரூரரான பெரும் சரீரமுள்ள ப்ரளயகாலாக்னி போன்ற பைரவரை நமஸ்கரித்து உத்திரவு பெறவேண்டும். நாம் முழுகும் ஸ்தாநத்தில் தீர்த்தராஜனை கங்கையை ஆவாஹனம் செய்து தகாததை புஜித்ததாலும் பேசியதாலும் தாநம் வாங்கியதாலுமுண்டான பாபத்தை நீக்குமென அதை வேண்டவேண்டும். மஹாவிஷ்ணு முதலிய தேவர்களையும் ஸ்மரிக்கவேண்டும். வருண ஸூக்தம் சொல்லி முழுகி அகமர்ஷண மந்திரம் ஜபிக்கவேண்டும்.

காலையில் ஸந்தியை ஜபம் ஹோமம் முதலிய பல கர்மாக்கள் செய்ய வேண்டியிருப்பதால் மிகச் சுருக்கமாக அவசியமானதை மட்டும் சொல்லி சீக்கிரம் ஸ்நாநம் செய்தால் போதும். மாத்யான்ஹிக ஸ்நாநம் மந்திரங்களுடன் ஸாவகாசமாகச் செய்யவேண்டுமென்பது விதி. ஸ்நாநமான பிறகு இடுப்பளவு ஜலத்திலிருந்துக் கொண்டே ஸ்நாநாங்கமாக தேவரிஷி பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்யவேண்டும். கிழக்குமுகமாக பிரும்மாதி தேவர்கள் ஸர்வ தேவர்கள் ஸர்வ தேவகணங்கள் ஸர்வ தேவ பத்னிகள் ஸர்வ தேவ கண பத்நிகள் இவர்களுக்கு நுனி விரல்களால் (தேவ தீர்த்தம்) ஒவ்வோர் முறை ஜல தர்ப்பணம் செய்து, வடக்கு முகமாக நின்று நிவீதியாக இரண்டிரண்டு முறை க்ருஷ்ணத்வைபாயநர் முதலிய ரிஷிகள், ஸர்வ ரிஷிகள், ஸர்வரிஷிகணங்கள், ஸர்வ ரிஷி பத்னிகள், ஸர்வ ரிஷிகண பத்நிகள் இவர்களை ரிஷிதீர்த்தத்தால் (சுண்டு விரல் பக்கமாக மரித்து) தர்ப்பிக்கவேண்டும். தென் முகமாக பிராசீனாவீதம் தரித்து, ஸோம...கவ்யவாஹநாதி பித்ருக்கள் ஸர்வ பித்ருக்கள், ஸர்வபித்ரு கணங்கள் ஸர்வபித்ரு பத்நிகள், ஸர்வபித்ரு கண பத்நிகள், என்

பவர்களுக்கு மும்மூன்று முறை பித்ரு தீர்த்தத்தால் (கட்டை விரலுக்கும் ஆள்காட்டிவிரலுக்குமிடை) தர்ப்பணம் செய்து, ஆசமனீயமான பிறகு கரையேறவேண்டும். கரையில் ஓர்ஜலாஞ்சலி எடுத்துவிட்டு சரீரமலத்தாலுண்டு பண்ணிய பாபத்தையகற்ற யக்ஷ்மாவை தர்ப்பிக்கவேண்டும். பிறகு ப்ராசீனுவீதியாக கொஞ்சநேரம் சிகையை முன்னே தொங்கவிட்டுக்கொண்டு நிற்கவேண்டும். அப்போது உடலிலிருந்து விழும் பிந்துக்களால் பித்ரு தேவர்கள் ஸந்தோஷமடைகின்றனர். ஸ்நாநத்திற்குப் புறப்படும் போதே ஸகல தேவர்களும் இவனுடன் கூடவே கிளம்பி வருகின்றனர். இத்தீர்த்தத்தை யளிக்காமல் உடலைத் துடைத்துக்கொண்டால் அவர்கள் நிராசையாக சபித்துக்கொண்டே திரும்புவர். ஆதலால் இப்படி நிற்க வேண்டும்.

பின் புறமே சிகாஜலம் விழுந்தால் அது ஸுராபிந்துவாகும். உத்தரீய வஸ்திரத்தை நாலாக மடித்து நிவீதியாக நின்று "எவர்கள் எக்குலத்திலுதித்து புத்ரனில்லாமல் கோத்திரத்தினுலுண்டானோர் இறந்தார்களோ அவர்கள் என்னால் கொடுக்கப்பட்ட வஸ்த்திர ஜலத்தை ஏற்கட்டும்" என்று பிழிய வேண்டும். உலர்ந்த துணியால் தலையை ஒன்றுலும் மற்றொன்றால் உடலையும் துடைத்துக் கொள்ளவேண்டும். ஸங்கல்பம், வருண ஸூக்தபடனம், மார்ஜனம், அகமர்ஷணம், தேவாதி தர்ப்பணம் என ஸ்நாநத்திற்கு ஐந்து அங்கங்களாம். மூன்றாண்டு விடாமல் ப்ராதக்காலத்தில் விதிப்படி ஸ்நாநம் செய்தவருக்கு ஏழு ஜன்மத்தில் செய்த பாபம் நீங்கும். தேவேந்திரன் விருத்தாஸுரனைக்கொன்ற ப்ரஹ்மஹத்தி தோஷத்தைப் பலரிடம் பிரித்தளித்தும் போகவில்லை. மஹரிஷிகள் மந்திரஸ்நாநம் செய்து வைத்து அதை நீக்கினர் என்றால் பாபம் நீங்கத்தடை என்ன?

இரவில் நமதுள்ளேயுள்ள கருவிகள் ஓயாது வேலை செய்து உஷ்ணத்தை விருத்தி செய்கின்றன. நவத்வாரங்கள் வழியாகவும் மலங்கள் வெளிக்கிளம்பும் போது ஆவியாக ஆங்காங்கு தங்குகின்றன. மூளையிலும் கொஞ்சம் கொதிப்பேறுகிறது. அவைகளை நீக்கத் தக்க மருந்து காலையில் சீத ஜலத்தில் ஸ்நாநமே. கண்ணெரிச்சல், உள்ளங்கால் எரிச்சல் கபால உஷ்ணம் முதலியவைகளையகற்றி கண்ணிற்கும் ஒளியையும் தேஹத்திற்கு ஆரோக்யத்தையும் அளிக்கிறது. பைத்தியம் முதலிய மூளை வியாதிகளுக்கு தாராஸேகம் (அருவிஸ்நாநம்) முதல்மருந்தென சாகம் கூறுகிறது. பித்தோஷ்ணத்தால் தோன்றும் தூக்கமின்மை துஸ்வப்நம் சொறி சிறங்கு முதலியவைகளை அடியோடகற்றும். மனத்தெளிவு அழகு பாக்கியம் சோகமின்மை பலம் தேஜஸ் ஆயுஸ் முதலியவைகள் திருஷ்டபலம். உத்தம அங்கத்துடன் தாழ்ந்த அவயவங்கள் உறங்கும்போது சேருகின்றன, அத்தோஷத்தையும் தகாதவிடம் சென்றதையும் ரஹஸ்யத்தில் அறியாமல் செய்ததையும் நீக்குமென ஸ்ம்ருதிகள் போற்றுகின்றன.

உஷ்ணதேசமான இப்பாரத நாட்டில் மூன்றுமுறை ஸ்நாநம் அமைத்தது எவ்வளவு புத்திசாலித்தனம்? வெயிற்காலத்தில் தேகாரோக்கியத்தைக் கருதி அதிக முறையும் பலர் ஸ்நாநம் செய்கின்றனர். பகல் ஸ்நாநம்தான் விரிவாகச் செய்யவேண்டுமென விதி. நல்ல மண்ணையும் கோமயத்தையும் நெல்லி முள்ளியையும் நாயுருவியையும் ஒவ்வொரு அவயவமாகத் தடவி தேய்த்து நிதானமாக முழுகவேண்டும். சுண்ணும்பும் கொழுப்பும் கலந்து அன்னியர் பணம் பரித்துச்செல்லும் வழியான சோப்புகளை வாங்கித் தேய்த்து சரீரத்திலில்லாத புதுநாற்றத்தைப் பெறுவோர் செலவில்லாது தேஹாரோக்யத்தை வளர்த்த முனிவர் வகையையறிவரோ? ஜலமே ஸர்வ ரோகத்தையும் நீக்கவல்ல மருந்தென வேதமோதுகிறது. சரீரத்தில் வேர்வை துற்நாற்றம் அதிகம் தோன்றுவிடில் அன்னியரைப் பார்த்து பகலில் ஒரு வேளைக்குளிப்பதைக் கூட சிலர் விட்டு விடுவர். எப்படியும் ஸ்நாநம் செய்கிறோம். அதை ஆரோக்யத்தைக் கோறியாவது காலையில் செய்யலாகாதா? காலை முழுகுவோர் அநுபவத்தில் அறியத்தக்க அற்புதமான குணங்கள் பல உள. ஸர்வரோகத்திற்கு "தொட்டி ஸ்நாநம்" மருந்தென ஓர் மேனாட்டு வைத்தியர் (லூய் ஸ்க்லூனி) கூறிய முறையை இன்றும் நமது நாட்டில் பலரிடம்காணலாம்.

## ஸ்நாநத்திற்கு ஏற்ற ஜலம்.

மலையிருந்து தோன்றி ஸமுத்திரம் செல்லும் மஹா நதிகள் மிகச் சிலாக்கியமாம். அவைகளில் தங்கம் செம்பு முதலிய லோஹங்கள் கலந்து வருவதால் ஆரோக்யமானது. சிறு நதி நதங்களும் (கிழக்கே தோன்றி மேற்கே செல்வது நதம்) ஸரஸ், மடுவு, குளம், ஏரி, கிணறு இவைகளில் முறையே முன்னிருந்து சிலாக்யமானவைகள். முன்னது கிடைக்காவிட்டால் பின்னதில் முழுகலாம். பிறர் வெட்டிய குளம் கிணறு உதவாது. வகையில்லாவிடில் அதிலிருந்து எழு பிடி மண் எடுத்து வெளியில் போட்டு விட்டு முழுகலாம். நதியில் புதிதாக வந்த வெள்ளம், காய்ந்த குட்டையில் வந்த ஜலம், மழை பொழியும் ஜலம், வென்னீர் இவை உதவாது. பத்துநாள் கழித்து குட்டை ஜலமும், வியாதியுள்ளோனுக்கு வென்னீரும் ஏற்றதாகும். தவாலயதடாகங்கள் சிலாக்யங்களாகும், அமிழ்ந்து முழுகுவதே ஸ்நாநம். தூக்கி விட்டுக்கொள்ள நேர்ந்தால் செம்புக் குடம் உபயோகிக்க வேண்டும். நதிகளில் மேற்கு முகமாகவும் மற்ற விடங்களில் ஸூர்யாபிமுகமாகவும் ஸ்நாநம் செய்ய வேண்டும். வண்ணான் குட்டை உதவாது.

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவசர்மா.

# தர்மப்பிரமாண நிரூபணம்.

ஆரியர்களே ! தற்சமயம் தலைகவிழ்ந்து வரம்பின்றிக் கட்டில்லா
மல் மனதுக்குத் தோன்றுவதையெல்லாம் சிறியார் பெரியோரென்ற பேத
மில்லாமல் வாய்கூசாமலும் மனது நடுங்காமலும் சமயாசமயமின்றி இதை
ச்சொல்வதால் இன்னகேடு நேரிடும் என்று ஆலோசனையின்றி நினைத்த
தையெல்லாம் தர்மமென்று பிதற்றி சாதுக்களையும் ஸாமான்யர்களையும்
நடுங்கச் செய்யும் காலமாய் நிற்கிறதென்பதை நான் சொல்லித் தெரிந்து
கொள்ள வேண்டுமென்பதில்லை. இவ்விதமெல்லாம் பிதற்றுபவர்களே
காலம் கெட்டு விட்டதென்று கூறுகின்றனர். ஆனால் எவ்விதம் கெட்
டது. கெடாத ஸ்வரூபம் எதென்று கேட்டுவிட்டால் மட்டிலும் பதிற்
பற்பலவாறு வரம்பின்றியே கூறுவர். ஆகவே அத்தகைய இக்காலத்
தில் உண்மையான தர்மம் இன்னதென்று தத்வமறிந்தோர் எடுத்துக்
கூறமுற்பட்டால் அத்தகையோரை 10-வது நூற்றாண்டுக்காரரென்று ஏள
னம் செய்து விடுவார். ஆகையால் அவர்களை முன் வைத்துக்கூற இப்
போது நான் முன் வரவில்லை. மற்று தத்வம் தெறியாமற் தடுமாறிபெரி
யார் வழி நடக்கவேண்டி வழிகாட்டியை எதிர் பார்ப்பவர்களை அழைத்து
மட்டிலும் மஹான்கள் வந்து நம்மை நல்வழிசெலுத்த வருமளவும் நாம்
இருக்க வேண்டிய வழி இன்னதென்றும் அவ்வழியில் நின்றால் நம்மிடத்
தில் நவீன தர்மக் காட்டாறுகள் வந்து கலக்காமலிருக்குமென்று மட்டி
லும் கூறுவதாய் உத்தேசித்து முன் வருகிறேன். இதன் மூலம் நமது
தர்மசாஸ்திரங்களின் கொள்கையை ஓர் ஒழுங்கு செய்து கூறுவதாயும்
உத்தேசம். அதில் முதலில் தர்மப்பிரமாணம் இன்னதென்பது தெரியவே
ண்டியதுதான் அடிப்படை என்று கொண்டு அதிலிறங்குகின்றேன்.

இக்காலத்தில் முற்கூறியவாறு எல்லாம் தர்மமென்பது ஒரு கால
த்தும் ஏற்றுக்கொள்ளத் தகாததே. ஏதாவதொன்றைப் பிரமாணமாக
வைத்து அது எதைக் கற்பிக்கிறதோ அதைத் தர்மமென்றுதான் ஏற்றுக்
கொள்ள வேண்டும். உதாரணமாய் ஒரு தேசத்திற்கு அரசன் மந்திரி முத
லிய அநேக அதிகாரவர்க்கமிருந்தாலும் தலைவனொருவனுடைய அதிகார
த்திற்குட்பட்டே உலகம் நடக்கும். ஒரு வீட்டில் ஏராளமான சொத்
துக்கு அதிபர்களாய்ப் பல சகோதரர்களிருந்தாலும் ஒருவனுடைய வரம்
பிற்குட்பட்டே மற்றவர்கள் நடக்க வேண்டும். இன்றேல் குடித்தனம்
நன்கு நடைபெறா. இது யாவராலுமறியத்தக்கதே. ஆகவே நம்மத விஷ
யத்திலும் அதற்கேற்பட்டவர்கள் சொல்வதைப் பிரமாணமாகக்கொள்ள
வேண்டும். தர்மம் இன்னதென்றும் அதற்குப் பிரமாணமின்னதென்
றும் நம் முன்னோர்கள் வரையறுத்திருப்பதை நாம் பிரமாணமாகக்கொள்ள
வேண்டுமென்று இப்போது நிரூபிப்போம்.

முதலில் மனு, தர்மத்திற்குப் பிரமாணம் எது என்பதைக் கூறஆரம்பிக்கும் போது

वेदोऽखिलो धर्ममूलं स्मृतिशीले च तद्विदाम् ।
आचारश्चैव साधूनामात्मनस्तुष्टिरेव च ॥

வெடோ஽விலொ யமூலம் ஸ்ம்ருதிஶீலெ ச தவிதாம் ।
ஆசாரஶ்சைவ ஸாதூநாமாத்மநஸ்துஷ்டிரெவ ச ॥

வேதம் முழுமையும் அதை அறிந்தவர்களின் ஸ்மிருதியும் சீலமும் ஸாதுக்களது ஆசாரமும் தன்னுடைய ஸந்தோஷமும் தர்மத்திற்கு மூலம்என்றார்.

இதனால் தர்மம் என்ற பதத்திற்கு நாம் தோன்றியபடி எல்லாம் அர்த்தம் செய்வது தவறென்று ஆயிற்று. நம் இஷ்டப்படி அர்த்தம்கொள்வதற்கெல்லாம் வேதம் முதலியன இடம் கொடுக்கமாட்டாதென்றாயிற்று. ஆகவே அனாதிஸித்தமான வேதம் எதைத் தர்மமாய் நினைத்து அதற்கு மூலம் சொல்ல ஆரம்பித்ததோ அதுதான் என்றுமழியாத தர்மம் என்றாயிற்று. இங்கு வேதம் முழுமையும் என்றதனால்

मन्त्रब्राह्मणयोर्हि वेदनामधेयं மந்த்ரப்ராஹ்மணயொர்ஹி வெதநாமதெயம் என்ற மூதுரைப்படி மந்திரம் பிராம்மணம் முதலிய யாவும் வேதமெனக் கொள்ள வேண்டுமென்றாயிற்று. இக்காலத்திய மேதாவிகள் பிராம்மணம் வேதமில்லையென்றும் மந்திரரூபமான ரிக்வேதம்தான் வேதமென்றும் ரிக்வேதகாலம் முந்தியது. யஜுர்வேதகாலம் பிந்தியது என்றும் கோஷிப்பதற்கு அவர்கள் கற்ற மேற்றிசை வித்தைதான் பிரமாணமேதவிர வேறல்ல. மற்றும் अखिल அவில என்றதனால்பிராம்மணம் அர்த்தவாதம் முதலிய யாவும் கிரகிக்கத்தக்கது. ஆனால் வேதத்தில் காணப்படாத சில விஷயங்களை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். அவ்விதமாயின் அவை விலக்கத் தக்கதே என்றோர் சங்கை நிகழ அதற்காகத்தான் स्मृतिशीले च तद्विदाम् ஸ்ம்ருதிஶீலெ ச தவிதாம் । என்றார்

அவ்வேதத்தை அறிந்தவர்களது ஸ்மிருதியும். சீலமும் என்றார். ஸ்மிருதியென்றால் நினைப்பு என்றாகிறது. அதாவது அவர்களது நினைவு தர்மமூலமென்றால் நினைவைப்பார்த்து அனுஷ்டிக்க யாவராலுமியலாது. ஆகவே அவர்கள் நினைத்ததை அப்படியே எழுதி வைத்தனர். அதை நாம் ஸ்மிருதி என்கிறோம். அதாவது தர்மசாஸ்திரம் இதிஹாஸம் புராணங்களும் தர்மமூலம் என்றாயிற்று. ஆனால் அவர்கள் நினைத்து எழுதிவைத்ததெல்லாம் சரியோ என்றால் சரி என்றே ஏற்றுக்கொள்வோம். அதற்காகத்தான் வேதமறிந்தவர்கள் என்று ஓர் அடைமொழி சாற்றினர் ஆதல் பற்றியே

**श्रुतिं पश्यन्ति मुनयः स्मरन्ति च तथा स्मृतिम् ।**
**तस्मात्प्रमाणमुभयं प्रमाणैः प्रमितं भुवि ॥**

ச்ருதிம் பச்யந்தி முநய: ஸ்மரந்தி ச ததா ஸ்ம்ருதிம் ।
தஸ்மாத்ப்ரமாணமுபயம் ப்ரமாணை: ப்ரமிதம் புவி ॥

இனி சீலமென்பதை கவனிப்பாம்.

**संभावनीयताहेतुरात्मगुणसम्पत् शीलम् ।**

ஸம்பாவநீயதாஹேதுராத்மகுணஸம்பச்சீலம் ।

எல்லோராலும் மதிக்கத்தக்கதற்குக் காரணமான ஆத்மகுணம் சீலம் என்றார். மகாபாரதத்திலும்

**तत्तत्कर्म तथा कुर्यात् येन श्लाघ्येत संसदि ।**
**शीलं समासेनैतत्ते कथितं कुरुनन्दन ॥**

தத்தத்கர்ம ததா குர்யாத் யேந ச்லாக்யேத ஸம்ஸதி ।
சீலம் ஸமாஸேநைதத்தே கதிதம் குருநந்தந ॥

எக்கர்மத்தில் ஸகல பெரியோர் யாவரும் புகழ்வார்களோ அதுதான் சீலம் என்றார். இதற்கு உதாரணமாய் தர்மபுத்திரர் நச்சுப்பொய்கையில் ஜலமருந்தப்போன ஸகோதரர் நால்வரும் மறித்தபிறகு தானும் போய்அங்கு கொக்குக் கேட்ட கேழ்விக்கு விடையளித்ததும் அது ஸந்தோஷத்துடன் இன் நால்வருள் எவரையேனுமொருவரை எழுப்பிக்கொள் என்று சொன்ன வார்த்தையைக் கேட்டு நகுலஸஹதேவர்களுக்குள் யாராவதொருவர் பிழைகட்டுமென்று கேட்டடதையும் கூறியிருக்கிறது. இவ்வளவால் இக்காலத்திய நம்மவர்க்கு சங்கைள் தீர்ந்துவிடாது. எனெனில் இக்காலத்திலும் உலகம் புகழத்தக்க செய்கையுள்ளவர்கள் பலர் இருக்கின்றனர். அப்போது அவரது வாக்குறுதிகளும் நம்பத்தக்கதுதானென்றும் அதுதான் தர்மமூலமென்றும் நமது சாஸ்திரப்படி ஒப்புக்கொள்ளப் படுகிறதே யென்றாகுமோவென்றால் ஒருக்காலுமாகாது வேதமறிந்து அதன்படி 'ஒழுகுகின்றவர்களின் ஸ்மிருதியும் சீலமும் என்றுதான் ஜாக்கிரதையாய்ப் போட்டிருக்கின்றனர். இவ்விதச்சங்கை மேலாழ்ந்தபடி காலக்கிரமத்தில் நேரலாம். அதுவும் கூடாதென்று போல் முற்கூறியசுலோக 'வ்யாக்யாதா குல்லூகபட்டர் சீலம்என்பதற்கு ஹாரீதருடைய வாக்கியத்தைப் பிரமாணமாகவிவரித்து விட்டார் அதாவது.

**ब्रह्मण्यता, देवपितृभक्तता, सौम्यता, अपरोपतापिता, अनसूयता, मृदुता, अपारुष्यता, मैत्रता, प्रियवादित्वं, कृतज्ञता, शरण्यता, कारुण्यं, प्रशान्तिः. इति त्रयोदशविधं शीलम् ॥**

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌤𑌾, 𑌦𑍇𑌵𑌪𑌿𑌤𑍃𑌭𑌕𑍍𑌤𑌤𑌾, 𑌸𑍌𑌮𑍍𑌯𑌤𑌾, 𑌅𑌪𑌰𑍋𑌪𑌤𑌾𑌪𑌿𑌤𑌾, 𑌅𑌨𑌸𑍂𑌯𑌤𑌾, 𑌮𑍃𑌦𑍁𑌤𑌾. 𑌅𑌪𑌾𑌰𑍁𑌷𑍍𑌯𑌤𑌾, 𑌮𑍈𑌤𑍍𑌰𑌤𑌾, 𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑌮𑍍, 𑌕𑍃𑌤𑌜𑍍𑌞𑌤𑌾, 𑌶𑌰𑌣𑍍𑌯𑌤𑌾, 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌮𑍍, 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃. 𑌇𑌤𑌿 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌵𑌿𑌧𑌂 𑌶𑍀𑌲𑌮𑍍 ॥

பிராமண்ணியப் பிரியமிருத்தல் தேவபித்ருக்களிடத்தில், பக்தி செலுத்தல் ஸௌம்யமாயிருத்தல், பிறனுக்கு தாபம் கொடாமை, அஸூயையின்மை, மிருதுத் தன்மை, கடுமையற்றிருத்தல், யாவரிடமும் ஸ்னேகம் செய்யும் தன்மை, பிரியமாய்ப் பேசும் தன்மை, நன்றிமறவாமை, தஞ்சமென்றவனைக் காப்பாற்றல், கருணையோடிருத்தல் சாந்தமாய் இருத்தல் ஆகிய இக்குணங்களே சீலமென்ற சொல்லின் அர்த்தம். இவைகள் பொருந்துவது வேதநெறி வழுவாத மகான்களுக்குத் தான். ஆகவே வேதம் போல் அதை அறிந்தவர்களுடைய ஸ்மிருதி என்ற தர்மசாத்திரங்களும் அவர்களது சீலமும் பிரமாணமாகும். அம்மட்டா. சாதுக்களது ஆசாரமும் தர்மத்தில் பிரமாணந் தான். ஆசாரமென்றால் சௌசம், ஆசமனம் முதலியன. வேதமும் தர்மசாஸ்திரமும் கிடையாதவரை சாதுக்களது ஆசாரத்தைப் பார்த்து நடத்து. அவர்களது அவ்வாசாரமும் வேத வரம்பை விட்டுத்தாண்டவே மாட்டாது. இனி தன்னுடைய மனச்சந்தோஷமும் தர்மப்பிரமாண மென்கிறார். இதன் பொருள் இது. நமக்கு கீழ்க் கூறப்பட்ட வேதம் முதலிய பிரமாணம் கிடைக்காமலோ அல்லது கிடைத்தாலும் அதில் இருவகையாய்க் காணப்படினும் எதை அனுஷ்டிப்பதென்று சங்கை ஏற்பட்டாலோ அப்போதும் எவ்விதமனுஷ்டிக்கலாமெனின் அங்கு தன்மனது எதில் சந்தோஷமாய் நாடுகிறதோ அது தர்ம மூலம் என்கிறது. ஆனால் நமது மனது தர்மத்தை அனுஷ்டியாமலிருப்பதிலும் வேத விரோதமான விஷயத்திலும் சந்தோஷமாய் நாடுகிறதே. அதுவும் தர்மமூலமோவெனில் இல்லை. இங்கு தன்னுடைய மனதின் பிரவர்த்தி என்றதால் வேதானுஷ்டானத்தை ஸரிவர நடத்தி வரும் மகான்களது ஸந்தோஷமென்று அர்த்தமே தவிற எல்லோருடையவும் என்று அர்த்தமல்ல.

आचारश्चैव साधूनामात्मनस्तुष्टिरेव च ।

𑌆𑌚𑌾𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌰𑍇𑌵 𑌚 ।

என்றவிடத்தில் साधूनां 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 என்ற பதம் இரண்டுக்கும் பொதுவாய் நிற்கிறது. ஆகவே சங்கைக்கு இடமில்லை. இங்கு வேறு சங்கை உண்டாகிறது. முதலில் வேதம் தர்மமூலமென்று கூறி அடுத்தடுத்து வேதத்தை ஒட்டிய ஸ்மிருதி முதலியவை பிரமாணமென்கிறோம்.

அவ்விதம் பிரத்தியக்ஷமான வேதத்தைப்ராமாணமில்லாமலே மனுமுதலிய வர்கள் சிற் சில தர்மாசாரணங்களைக் கூறியிருக்கின்றனரே. அது எவ் விதம் பிரமாண கோடியில் வரலாமென்றால் அதன்று அவர்களது தர்மங்களும் வேத மூலம் தான். அவ்வித வேதவாக்கியமிருப்பதாய் நமக்குப் புலப்படவில்லையே எனின் குற்றமில்லை. இலம் என்று கூறப் படும் வேத வாக்கியங்கள் நமக்குப் புலப்படாமல் கோடானுகோடி சிதறிக்கிடக்கின்றன அவைகளைக் கண்டறிந்த மகான்கள் அவர்கள் தான். ஆதல்பற்றியே பிரதிபலனை விரும்பாது தவத்தினால் வேதங்க ளெல்லாவற்றையுமறிந்து லோகநன்மை ஒன்றையே கருதிதர்மசாஸ்திரங் கள் இயற்றியமையால்தான் அவர்கள் அதிசயமாய்க் கொண்டாடப்படு கின்றனர். அத்தகையோர் கூறியதர்மத்திற்கு வேதமூல முண்டென் பதை நிச்சயமாய்க்கொள்ளல் வேண்டும். இதையே ஆபஸ்தம்பர்.

तेषामुत्सन्नाः पाठाः प्रयोगादनुमीयन्ते ।

தேஷாமுத்ஸந்நா: பாடா: ப்ரயோகாதநுமீயந்தே ।

விட்டுப்போன பாடங்கள் அவர்களது பிரயோகத்தினால் இருந்ததாய் அனு மானிக்கப்படுகிறதென்றார். இதனால் ஆனது என்னவெனில் பிரத்யக்ஷ வேதமும் அப்பிரத்யக்ஷமான வேதார்த்தத்தைக் காட்டக்கூடிய ஸ்மிருதி யும் பிரமாணம் என்றாயிற்று. இவைகளை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டுதான் ஹாரீதர் என்பவர்.

वेदाः प्रमाणं स्मृतयः प्रमाणं धर्मार्थयुक्तं वचनं प्रमाणम् ।

यस्य प्रमाणं न भवेत्प्रमाणं कस्तस्य कुर्याद्वचनं प्रमाणम् ॥

வேதா: ப்ரமாணம் ஸ்ம்ருதய: ப்ரமாணம் தர்மார்த்தயுக்தம் வசநம் ப்ரமாணம் । யஸ்ய ப்ரமாணம் நபவேத்ப்ரமாணம் கஸ்தஸ்ய குர்யாத்வசநம் ப்ரமாணம் ॥

வேதங்கள் பிரமாணம், ஸ்மிருதிகள் பிரமாணம் தர்மார்த்தத்தோடுகூடிய வசனம் பிரமாணம், இப்பிரமாணம் எவனுக்குப் பிரமாணமாகாதோ அவ னது வசனத்தை யார் பிரமாணமாய்க்கொள்வார் என்றார் ஆபஸ்தம்பர். வேதப்பிரமாணத்தைக்காட்டிலும் அவ்விதமகான்களது நடத்தைதான் முதற்பிரமாணம் பிறகுதான் வேதங்கள் என்று

धर्मज्ञसमयः प्रमाणं वेदाश्च  தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாஶ்ச ।

என்ற வாக்கியத்தாற் கூறுகின்றனர். ஆகவே இதனால் நமக்குக்கிடைத் தது இது. வேதஸ்மிருதி மூலமான உபநயனம் முதலியனதான் தர்மம், இதற்கு விரோதமாய் நிற்கும் சமணர் முதலியவர்களின் சாத்திரத்திற்

கூறிய இதரதேவதையைத் தொழுதல் கேசங்களை அறுத்துக்கொள்ளல் ராச்சந்தியிற் கும்பிடுதல் இராப்புசித்தலை விலக்கள் திகம்பரனாய்த்திரிதல் முதலியவை தர்மமல்லவென்று கொண்டு தர்மப்பிரமாணத்தைக்கண்டு விதிப்படி நடந்து சிரேயஸ்ஸை அடைவோமாக. சுபம் !

M N. சுப்ரமணிய சாஸ்திரீ.

---

# மகோதயம் சென்றுவிட்டது.

ஆர்யர்களே! தர்மம் மிக மெலிவுற்று அதர்மம் ஆடம்பரமாய் உலாவுகிறதென்பதை யறிவிக்கப் பிரமாணம் தேடவும் வேண்டுமா? தர்மாதர்மம் அப்பிரத்யக்ஷம் என்பது தான் நமது சாஸ்திர சித்தாந்தமாயினும்,

**धर्मस्याप्रत्यक्षत्वेऽपि कार्येण तत्प्रयुक्तेन प्रत्यक्षवत् व्यपादिश्यते ।**

**ய[illegible]ஸ்யாப்ரத்யக்ஷத்வேऽபி கார்யேண தத்ப்ரயுக்தேந ப்ரத்யக்ஷவத் வ்யபதிஸ்யதே ।**

தர்மம் பிரத்யக்ஷமாம் இல்லாவிடினும் அதனது கார்யத்தால் ப்ரத்யக்ஷம் போல் வ்யவகரிக்கப்படுகிறது என்று பகவத்பாதர் உபதேசித்தபடி பிரத்யக்ஷமாகவே தெரிகின்றது.

பிரக்ருதத்தில் சென்ற 11வது வருடம் நம் ஆர்யதர்மம் 44வது ஸஞ்சிகையில் கிருஷ்ணபுரம் சிவஸ்வாமி தீக்ஷிதர் என்பார். மகோதயபுண்யகாலம் தைமீ 20ம் தேதி புதன்கிழமை அனுஷ்டிக்கப்பாலது என்றும் அது நியாயமில்லை ஸோமவார யோகமில்லாததால் என்று மறுப்பு வைதிக தர்மாபிமானியார் முதலியவர்களாலும், கடைசியாய் சுந்தரேச சாஸ்திரி வைத்தியநாத கனபாடி என்பவர்களால் கிருஷ்ணபுரம் தீக்ஷிதர் கூற்றை பலப்படுத்தியதும், அதற்கு மறுப்பு வைதிகதர்மாபிமானியால் எழுதப்பெற்றும் பத்திரிகை பெருகி 12வது வருடம் 2வது ஸஞ்சிகையோடு முடிந்திருக்கிறது. ஆனால் அது அனுஷ்டிக்கப் படவில்லை. இது ஓர் புறமிருக்கட்டும். இங்கு முதலில் ஒன்று ஆராய்வோம். இவ்விதம் ஒரு விஷயத்தில் இரண்டு அபிப்பிராயம் எற்பட்டதில் ஒன்றுதான் பிரமாணமாய் இருக்க வேண்டுமேயல்லாது இரண்டுமல்லவென்பது யாவருக்கும் தெரிந்ததே, இவ்விதம் ஓர் விஷயத்தைக் குறித்து சர்ச்சை செய்ய வேண்டியதவசியமேயாயினும் முடிவுக்கு வராமல் நான் சொல்வது தான் சரியென்று இருதிறத்தாரும் எண்ணிக்கொண்டுவிட்டால் ஸாமான்ய ஜனங்கள் கடைத் தேறுவதெவ்விதம். நாம்தான் எவ்விதம் தேறுதலடைவோம். இவ்விதமாகாமல் ஒரு முடிவுக்குவர நமக்கு எற்பட்டவழி இது என்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கது. அதாவதுமுதலில் நாம்எல்லாவற்றையும்

கண்டதாய்எண்ணிக்கொள்ளாமலிருத்தல், பிறகும் அடக்கமாய்ப்பேசுதல் முதலியன. இவ்விதம் அறிந்து கொள்ளாமலே பலரும் தன் வைதுஷ்யத்தைப் பெரிதாய்க்கொண்டு அலக்ஷ்யமாய் பேசிவிடுகிறார்கள். உதாரணமாய் சென்ற வருடங்களில் சிராவண விஷயம் இவ்விதம் இரண்டு அபிப்பிராயம் வெளியிடப்பட்டு அவ்விதமே நின்றது. ஆனால் ஒரு சாரார் சொல்வது சரியென்பது நிச்சயமாயினும் இன்னாருடையது சரியென்றுஸாமான்யர்களாலறியப் படாவிடினும் பண்டிதர்கள் எப்போதும் அறிந்துகொள்கிறார்கள். அதை ஸாமான்யர்களும் அறிந்து கொள்ள்வேண்டுமானால் அதன்வழி முன்னமேயும் கூறியுள்ளேன். மீண்டுமிங்கும் கூறுகின்றேன். பெரியோர்கள் எதைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டனரோ அதுதான் யாவருக்கும் பிரமாணம். நமது கிராமத்தில் இவர்தான் பெரியோர் என்று ஏனையோர் நினைத்தாலும் அவர்மட்டிலும் நான் பெரியவர்தான் அதனால் தான் நம்மை எல்லோரும் பெரியோரென்று நினைக்கிறார்களென்று எண்ணிவிடக்கூடாது. அவர் தம்மிலும் பெரியோரைத் தேடவேண்டும். அவ்விதமில்லாவிடில் எல்லோரும் அவரை நம்பியதால் அது நியாயமற்றதாய் இருந்தால் அப்பாபம்அவர் தலையில்தான் விடியும். இவ்விதம் பாபத்திற்கு பயந்தவராய்ப் பண்டிதர் இருப்பின் அவர்ஒருபோதும் துணிந்து கர்ஜித்து பிறரை நிந்திக்கவும் முன்வரமாட்டார். சென்ற சிராவண சங்கையிலும், பிறகு ஸங்கிரமணதினத்தன்று கிரகணம் வந்தகாலத்து தர்ப்பணம் ஒன்றா இரண்டா என்று நிகழ்ந்த சங்கையிலும் ஆஸ்திகர்கள் தமக்குத்தோன்றியதைமட்டிலும் பிரமாணமாய்க் கொள்வதும் கேட்போருக்குக்கூறுவதும் அடாதகார்யமென்று பயந்து தம்மைக்காட்டிலும் பூஜிக்கத்தக்க மகிமை வாய்ந்த லோகபூஜ்யர்களான காஞ்சிகாமகோடி பீடாதிபர்களுக்கும் ஸ்ரீங்கேரிசாரதாபீடாதிபர்களுக்கும் விக்ஞாபனம் செய்துகொண்டு அவர்கள் உத்தரவிட்டதே ஸரி என்று அநுஷ்டித்தும் அநுஷ்டானம்செய்வித்தும் கிருதார்த்தர்களானார்கள். அப்போது மற்றோர் சாரர் மடத்தார்களுக்கு என்ன தெரியுமென்று வாயால் கூறியும் சிலர் கிரியாம்சையில் அவர்கள் உத்திரவைமீறியும் அநுஷ்டானம் செய்துகொண்டார்கள். ஆகவே நடுநிலைமையிலுள்ளவர்கள் இதில் யாருடைய ஸித்தாந்தம் சரியென்பதை இனி கவனித்தால் சுலபமாய் தர்மம் கிடைக்கும். இனியாகிலும் தர்ம சந்தேகத்தில் நமது ஆசார்யர்களையும், அவர்கள் பரமசாசார்யர்களையும் சரணமடைந்தால் உலகம் இப்போது போலல்லாது மேன்மையடைய மார்க்கம் கிடைக்கும்.

பிரகிருத விஷயத்தில் மஹோதயம் உண்டா இல்லையாவென்பதை ஸ்ரீ ஸந்நிதானத்தில் விக்ஞாபநம் செய்து கொள்ளாமல் நின்று விட்டதால் பண்டிதர்களுக்குக்கோபம் அதிகரித்து விட்டது. ஆயினும் இங்குவிசேஷமாய் நான் ஒன்றையும் கூறவில்லையாயினும் ஒருவாறு நியாயம் தெரிந்து கொள்ளலாமென்று நான் நினைக்கிறேன். அது யாவருக்கும் ஒவ்வும் ஒவ்வாதென்பதைச் சொல்ல முடியாது. முதலில் கிருஷ்ணபுரம் தீக்ஷிதரவர்

கள் கூறிய பிரமாணத்தில் புதன் கிழமைக்கு பலத்தைக் காட்டியுள்ளார். அது ஒவ்வாதென்று மற்றவர்கள் கூறினர். இதில் சாஸதிரப்பிரமாணங்களுடன் விசேஷமாய் ஆதாரம் கூறப்பெற்றிருக்கிறது. இது எவ்விதமாயினும் சரி தக்கப்பிரமாணங்கள் காட்டி சாந்தமாய் பதிற் கூறிவரும்போது கடைசியாய் சுந்தரேச சாஸ்திரியார் வெகு கோபாவேசத்துடன் ஆர்ப்பாடம் செய்தது பெரியோர் யாவருக்கும் துக்கத்தைக்கொடுக்கும். விஷயம் எவ்விதமாவது முடியட்டும். சாந்தமாய்க் கூறவும் வழி இல்லையா பரிகாசம் எதற்கு? மற்றும் பலரும் இருக்கிறார்கள் என்று சொன்னதில் குற்றம் யாதுளது. வைதிக தர்மாபிமானியிடத்தில் சாஸ்திரிகளுககு கோபமா ? மற்றும் சாஸ்திரிகள் கூறியது பொருத்தமுள்ளதல்ல வென்று வைதிக தர்மாபிமானியே அடுதுக் கூறிவிட்டார். அவ்விதமே அவ்விஷயத்தைப் பார்க்கும் பண்டிதர் யாவரும் அறியலாம். ஆகவே இங்கு நான் கூறவந்ததைக் கூறி இவ்விஷயத்தில் எனது அபிப்பிராயத்தையும் தெரிவித்து முடிக்கிறேன்.

இவ்விதம் இனியும் தர்மசங்கைநிகழுமாயின் அப்போது பொருமையுடன் பண்டிதர்கள் சர்ச்சை செய்து தீராத விஷயத்தில் அதற்காக ஏற்பட்டமடாதிபதி அவர்களின் ஆக்ஞைப்பிரகாரம் நடந்துகொள்ள வேண்டுமென்பதே.

பிரகிருத விஷயத்தில் தர்மசாஸ்திர வசனங்கள் பலவும் திங்கட்கிழமைக்கு மட்டிலும் மகிமையைக்கூறியதாலும் அப்பாதீக்ஷிதீயம் என்பது பிரஸித்தி பெற்று பிரமாணக்கிரந்தமாய் வைத்யநாததீக்ஷிதீயம் போல் ஒப்புக்கொள்ளப் பெருததாலும் அதற்கனுகுணமாய் இவ்வசனங்களை அடுக்குவது ஒவ்வாததாலும் வெகு கால அனுஷ்டானம் இல்லாததினாலும் சமீபத்தில் 4, 5 வருடங்களுக்கு முன் வந்தது திங்கள் கிழமைநேர்ந்ததாலும் அதை ஒருவரும் ஆக்ஷேபணை செய்யாததாலும் வடதேசத்திலுள்ளவர்களாவது இதை ஒப்பியிருநதால் ஏராளமாய் ராமேசுவரத்திற்கு யாத்திரிகர்களாக வந்திருப்பார்களாகையால் அவ்விதம் வராமையாலும் ஆர்ய தேசம் ஒரு பக்கத்திலும் இது விஷயமாய் சங்கையே நிகழாததாலும்இது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்லவென்பதே. சுபம் !

M. N. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

---

குறிப்பு:— இனி இவ்வருஷம்சென்ற தைமீ 20உ நடந்த மஹோதய சந்தேக விஷயமாய் வரும் விஷயங்களுக்கு நம் பேபரில் இடம் கிடைக்கமாட்டாது.

பத்திராதிபர்